மலேசியாவில் பயிலும் மாணவர் பாரதிதாசனுக்கு கல்வி நிதியை முதலமைச்சர் வழங்க முடியாது என்றால்

# தி.மு.க.வும், தமிழ்நாட்டு மக்களும் மாணவருக்கான கட்டணத்தைக் கட்டிப் படிக்க வைப்போம்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!




சென்னை, செப்.18-

மலேசிய தேசிய பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி படிப்பு மாணவர் பாரதிதாசனுக்குத் தேவைப்படும் நிதியை வழங்க முடியாது என்றால் அதனை முதலமைச்சர் வெளிப்படையாக அறிவித்து விடவும். தி.மு.க.வும், தமிழ்நாட்டு மக்களும் அந்த மாணவருக்கான கல்விக் கட்டணத்தைக் கட்டிப் படிக்க வைப்போம் என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து நேற்று (17-09-2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

"எதைப் பற்றியும் கவலைப்படாமல் படியுங்கள். உங்களுக்கு என்ன தேவையென்றாலும் நமது அரசு நிறைவேற்றித் தரும்" என்ற நம்பிக்கையை முதலமைச்சராக ஒவ்வொரு மேடையிலும் விதைத்தவன் என்ற வகையில், இந்தத் தம்பியின் கண்ணீர் நெஞ்சைக் கனக்கச் செய்கிறது.

அவர் கேட்பது உதவியல்ல, அரசு சார்பில் அவருக்கு உறுதியளிக்கப்பட்ட உரிமையைத்தான் கோருகிறார். ஆட்சி மாற்றம் ஏற்பட்ட காரணத்தாலேயே ஒரு மாணவரின் பல ஆண்டு உயர்கல்விக் கனவு பாழாகக் கூடாது.

ரோகித் வெமுலாவுக்கு நடந்தது போல எனக்கும் நடக்கிறது என்கிறார். எங்களுக்கு எதிர்க்கட்சியாகவே இருந்தாலும் அப்படி ஒரு அவப்பெயரைத் த.வெ.க. அரசு சுமக்க வேண்டாம் என்பதே என் வேண்டுகோள்.

மாணவர் பாரதிதாசனுக்குத் தேவைப்படும் நிதியை வழங்க முடியாது என்றால் அதனை முதலமைச்சர் வெளிப்படையாக அறிவித்துவிடவும். தி.மு.க.வும் தமிழ்நாட்டு மக்களும் அந்த மாணவருக்கான கல்விக் கட்டணத்தைக் கட்டிப் படிக்க வைப்போம்!"

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

திருமதி. துர்கா ஸ்டாலின் சகோதரி ஜெயந்தியின் மாமனார்:

திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் மருமகனும்,

# டி.என்.ஆர்.வனஜாவின் கணவர் ஜி. சுப்பிரமணியம் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 18–

திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் மருமகனும், டி.என்.ஆர். வனஜா அவர்களது கணவருமான திரு.ஜி.சுப்பிரமணியம் அவர்கள் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தி அறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:



திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் அவர்களது மருமகனும், டி.என்.ஆர்.வனஜா அவர்களது கணவருமான ஜி.சுப்பிரமணியம் அவர்கள் மறைவெய்திய துயர் மிகு செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

எனது மனைவி திருமதி.துர்கா அவர்களின் சகோதரி திருமதி. ஜெயந்தி அவர்களின் மாமனாரான அவர், பாசத்திற்கு இலக்கணமாய் விளங்கி, அன்பும் பண்பும் நிறைந்தவராக அனைவரது நன்மதிப்பையும் பெற்றவர். அண்ணா பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர்.

அன்னாரது மறைவால் வாடும் திருமதி ஜெயந்தி - சரவணன் இணையருக்கும், அவர்தம் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

பகுதிச் செயலாளர் வி.சுதாகர் தலைமை! சென்னை கிழக்கு மாவட்டம் சார்பில்

# மிசா காலக் கொடுமைகள் "நெருப்பாற்றில் நீந்திய காலம்" - எழும்பூர் தெற்கில் கருத்தரங்கம்!

## கி.வீரமணி – திருச்சி சிவா – தோழர் தியாகு உரையாற்றுகின்றனர்! மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, செப்.18-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் எழும்பூர் தெற்கு பகுதியில் மிசாக் காலக்கொடுமைகளை நெருப்பாற்றில் நீந்திய காலம் எனும் தலைப்பில் மாபெரும் கருத்தரங்கம் சென்னை எழும்பூர் வேப்பேரி பெரியார் திடலில் இன்று (18.9.2026 - வெள்ளிக்கிழமை) மாலை 6 மணி அளவில் எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி. சுதாகர் தலைமையில் நடைபெறுகிறது.

இக் கருத்தரங்கில் திராவிட கழகத் தலைவர் ஆசிரியர் வீரமணி கழக துணை பொதுச்செயலாளர் திருச்சி என் சிவா எம்.பி, தமிழ் தேசிய விடுதலை இயக்க பொதுச்செயலாளர் தோழர் தியாகு ஆகியோர் உரையாற்றுகின்றனர்

மேலும் இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன் தயாநிதி மாறன் எம்பி, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்பி, இரா.கிரிராஜன் எம்பி, ப.தாயகம் கவி,அ.வெற்றி அழகன்,ஜோசப் சாமுவேல்,

ப.ரங்கநாதன், கே எஸ் ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, டாக்டர் ஏ.பி. பூர்ணிமா, கார்த்திக் மோகன், பி கே மூர்த்தி, எம். விஜயகுமார்,கே சந்துரு, சி. மகேஷ் குமார், எஸ். மணிமுடி, ஷேக் அப்துல்லா,ராஜேஷ் ஜெயின், வே.உமாகாந்தன், பரிதிஇளம்சுருதி, தேடல் புருஷோத்தமன், ஆர்.வரதன், மாவட்ட நிர்வாகிகள் தேவஜவகர், ஜி எம் தேவன், புனிதவதி எத்திராஜன், இசட்.ஆசாத், பகுதி கழகச் செயலாளர்கள் சொ.வேலு, கூ.பீ. ஜெயின், வே வாசு, ஐசிஎப்.வ.முரளிதரன், எ நாகராஜன், டிஎஸ்பி ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், செ. தமிழ்வேந்தன், எம் சாமி கண்ணு, எஸ் ராஜசேகர் எஸ் முரளி, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ் பன்னீர்செல்வம், டி.வி. செம்மொழி, சாவித்திரி வீரராகவன்,கோ மணி, எம் பி உதயசங்கர், சரிதா மகேஷ் குமார், ரமேஷ் (எ) நீலகண்டன், எம்.இப்ராஹிம் கனி, இரா.கலைச்செல்வி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வானவில் விஜய், ஜெ. பாலமுருகன், பா. ஜெகதீஷ்,ஜி ஜேபிரபு, கே வினோத், எஸ். தனசேகர்,நா ரஞ்சித் விஜயா லயன், எல் பி எஃப் மோகன்,நா துலுக்கானம், கு கிருஷ்ணமூர்த்தி, பி. விஜயகுமார், பா.பிரதீப் குமார், எல்.சம்பத்குமார், எம்.பெரோஸ்கான், கா.ராஜா முகமது, ஆர் எஸ் சித்திக், இரா வீரமணி, ம.அசோக் குமார், எம் விநாயகம், சுதா தீனதயாளன் , ஜி சாந்தகுமாரி மற்றும் கழக நிர்வாகிகள் செயல்வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்,

இக்கூட்டத்தில் வட்ட கழகச் செயலாளர்கள் வி.விஜயகுமார்,ஆர்.பாபு. ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.




காஞ்சிபுரத்தில் தந்தை பெரியாரின் 148 வது பிறந்த நாளையொட்டி அவருடைய திரு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சமூக நீதி நாள் உறுதிமொழியை மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் தலைமையில் கொள்கை பரப்பு செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மாவட்ட பொருளாளர் சன் பிராண்டுகே.ஆறுமுகம், மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ் உள்ளிட்ட பகுதி செயலாளர்கள் மாநகர நிர்வாகிகள் ஏற்றனர்.

---

மதுராந்தகம் இடைத்தேர்தல்: வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து

# சென்னை கிழக்கு மாவட்டம் சார்பில் பணியாற்றும் பொறுப்பாளர்களுக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்கினார்!

## தா.மோ.அன்பரசன் – க.சுந்தர் பங்கேற்பு!

காஞ்சிபுரம், செப்.18-

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து சென்னை கிழக்கு மாவட்டதிற்கு ஒதுக்கப்பட்ட பாகங்களில் பணியாற்றும் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. ஆலோசனைகள் வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள் தா.மோ.அன்பரசன், க.சுந்தர் ஆகியோர் பங்கேற்றனர்.





மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து சென்னை கிழக்கு மாவட்டதிற்கு ஒதுக்கப்பட்ட பாகங்களில் பணியாற்றும் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று (17.09.2026 - வியாழக்கிழமை) மாலை 4 மணி அளவில், காஞ்சிபுரம் மாவட்டம், கருங்குழியில் உள்ள முகுந்தன் மஹாலில் நடைபெற்ற கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர், சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் ஆலோசனைகள் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஜோசப் சாமுவேல், ப.ரங்கநாதன், தமிழன் பிரசன்னா, டாக்டர் ஏ.பி. பூர்ணிமா, பி கே மூர்த்தி, எம். விஜயகுமார்,கே சந்துரு, சி. மகேஷ் குமார் மாவட்ட நிர்வாகிகள் புனிதவதி எத்திராஜன், பகுதி கழகச் செயலாளர்கள் கூ.பீ.ஜெயின், வே வாசு, ஐசிஎப்.வ. முரளிதரன், எ.நாகராஜன், டிஎஸ்பி ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், செ. தமிழ்வேந்தன், எம் சாமி கண்ணு, எஸ் ராஜசேகர் எஸ் முரளி, பொதுக்குழு உறுப்பினர்கள் சாவித்திரி வீரராகவன்,கோ மணி, சரிதா மகேஷ் குமார், ரமேஷ் (எ) நீலகண்டன், எம்.இப்ராஹிம் கனி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஜெ. பாலமுருகன், , கே.வினோத், எஸ். தனசேகர்,நா ரஞ்சித் விஜயாலயன், எல் பி எஃப் மோகன்,கு கிருஷ்ணமூர்த்தி, எல்.சம்பத்குமார்,எம்.பெரோஸ்கான்,கா.ராஜ்முகமது, ம. அசோக் குமார், சுதா தீனதயாளன் , ஜி சாந்தகுமாரி. மேலும் மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட வையாவூர், சூரை, அண்டவாக்கம் புதுப்பட்டு, நெல்லி குன்னங்குளத்தூர் ஆகிய ஊராட்சிகளுக்குட்பட்ட 10 பாகங்களின் நிர்வாகிகள் செயல்வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாசலம் நகரத்தில் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவ சிலைக்கு கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினர் சி.வி.கணேசன் தலைமையில் மாலை அணிவித்து உறுதிமொழி ஏற்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக, நகர கழக, ஒன்றிய கழக, பேரூர் கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.